**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 48/2017**

**Prosecution witness : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : கணேசன் | Caste | : |
| Father 's Name | : பாலசுப்பிரமணியன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)

**14.06.2023**

**முதல் விசாரணை**

நான் மேலஉரப்பனூரில் குடியிருந்து வருகிறேன். நான் பத்திர எழுத்தராக பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவண எண் 187/09 என்ற ஆவணத்தை நான்தான் எழுதினேன். மேற்கண்ட ஆவணமானது பவர் பத்திர ஆவணமாகும். டி.மனோகரன் என்பவருக்கு பாண்டியன் மற்றும் துரைபாண்டியன் ஆகியோர்கள் எழுதிக் கொடுத்த ஆவணமாகும். கடந்த 04.09.2009 அன்று மேற்கண்ட ஆவணமானது எழுதப்பட்டது. அதில் சாட்சியாக ரமேஷ் என்பவர் சாட்சிக் கையொப்பம் செய்தார். மற்றொரு சாட்சிக் கையொப்பத்தை யார் கையொப்பம் செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. மேற்கண்ட பவர் பத்திரத்தில் டி.புதுப்பட்டி 13/08 என்ற சர்வே எண்ணில் ஒரு ஏக்கர் 35 செண்ட் நிலத்தை பவர் பத்திரமாக பதிந்து கொடுத்தார்கள். மேற்கண்ட ஆவணத்தின் நகல் அ.சா.ஆ. 1 ஆகும் ( எதிர் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது போலிசார் விசாரணையில் கைப்பற்றி குற்றப்பத்திரிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்பதால் குறியீடு செய்ய அனுமதிக்கப்பட்டது). பவர் பத்திரம் மட்டும் பதிந்து கொடுத்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி.**

பவர் பத்திரம் என்பது நான் மேற்படி பத்திரத்தை எழுதிய போது எழுதிக் கொடுத்தவர் தன்னிச்சையாக ரத்து செய்து கொள்ள அனுமதி இருந்தது. அதற்கு பவர் பெற்றவரின் அனுமதி தேவையில்லை. பவர் பெற்றவர் பவர் கொடுப்பவருக்கு எந்த பிரதி உபகாரமும் செய்ய வேண்டியதில்லை. இந்த பவர் பத்திரம் ரத்தானதா என்ன என்ற விபரம் எனக்கு தெரியாது. அன்றைக்கு எந்த பணபரிமாற்றமும் நடக்கவில்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 48/2017**

**Prosecution witness : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : ரமேஷ் | Caste | : |
| Father 's Name | : ஆறுமுகம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)

**14.06.2023**

**முதல் விசாரணை**

நான் திருமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் பணி செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவண எண் 187/09 என்ற ஆவணத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அதனை தொடர்ந்த கிரைய ரசீதில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். மனோகரன் என்பவர் ரியல் எஸ்டேட் பணி செய்து வந்தார். சுமார் 15 வருடங்களுக்கு முன்பு மனோகரன் என்பவருக்கு பவர் பத்திரம் எழுதிக் கொடுத்தார்கள். யார் எழுதிக் கொடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியவில்லை. மேற்படி 2 ஆவணங்களிலும் உள்ள கையெழுத்துக்கள் முறையே அ.சா.ஆ. 2,3 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

கடந்த 04.03.2009 அன்று டிபுதுப்பட்டியை சேர்ந்த பாண்டியன் மற்றும் துரைபாண்டியை ஆகியோருக்கு சொந்தமான சர்வே எண் 13/08 ல் உள்ள ஒரு ஏக்கர் 35 செண்ட் உள்ள இடத்தை ரூ. 15 லட்சத்தி 50ஆயிரத்திற்கு மனோகரனுக்கு விற்பதாகவும் அதற்கு உண்டான பணத்தை பெற்று கொண்டு அதற்காக மனோகரன் என்பவருக்கு ஆவண எண் 187/09 என்பதின் வாயிலாக பவர் பத்திரம் எழுதிக் கொடுத்தார்கள் என்றும் அதனை தொடர்ந்து கிரைய ரசீது போட்டார்கள் என்றும் மேற்கண்ட 2 ஆவணங்களிலும் சாட்சிக் கையெழுத்து போட்டேன் என போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**